Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி–32 | 14–06–2004 | திங்கட்கிழமை | ஓசை –117




14 JUN 2004

## ஜே.வி.பி–சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர்

# தேசப்பற்றாளர் இயக்கத்தின் பெயரில்

# இ.த.அதிகாரசபையை எதிர்க்கத் திட்டம்

## போராட்டங்கள் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

**வடக்குக் கிழக்கிற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை அமைக்க சனாதிபதி முன்வருவாரேயானால் அதனை எதிர்த்து தீவிர நடவடிக்கையில் ஈடுபட சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் திட்டமிட்டு வருகின்றனர். நேரடியாக எதிர்ப்புத் தெரிவிக்காது தேசப்பற்றாளர் முன்னணி எனும் பெயரில் இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.**

இதன் அடிப்படையில் எதிர் வரும் வாரம் முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு தேசப்பற்றுள்ள தேசாபிமானிகள் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது. நேற்று முன்தினம் சனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இடைக்கால தன்னாட்சி தொடர்பில் பேச்சு வார்த்தைகளை நடத்தப் போவதாக கூறியிருக்கிறார். இந்த அறிவிப்பை ஏற்காது ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்த்துள்ளன. இவ்வாறான சூழநிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவரின் சடலம் மட்டக்களப்பு ஏறாவூர் சந்திவெளி ஜின்னா வீதியில் இருந்து ஏறாவூர் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மீட்கப்பட்ட இந்தச் சடலத்திற்குரியவர் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியள வில் கொல்லப்பட்டிருக்கலாமென உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜீஎச். சேகரஹல தெரிவித்துள்ளார்.

மேற்படி இறந்தவரின் கழுத்தில் கத்திக்குத்து காயம் காணப்படுவதாக மட்டக்களப்புப் பிரிவின் நடவடிக்கைக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.இதேவேளை கொல்லப்பட்டவர் சாமித்தம்பி அருள்ராஜா (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சிறீல.சுகாதார சேவை ஊழியர்கள் மீண்டும் போராட்டம் நடத்தமுடிவு

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் தமது போராட்டங்களை நடத்தப் போவதாக எச்சரித்துள்ளனர்.

சம்பளமுரண்பாடு மற்றும் சம்பள உயர்வு என்பவை தொடர்பில் தமது கோரிக்கையைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா மூன்று மாதகால அவகாசம் கோரியுள்ளார். இது தமது பிரச்சினையை கால தாமதிக்கும் செயலாகும். எனவே இதுதொடர்பில் இன்று தமது தொழிற்சங்கம் முடிவை மேற்கொண்டு நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தப்போவதாக எச்சரித்துள்ளது. (32)

## சனாதிபதி சந்திரிகா லண்டன் பயணம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா ஒருவாரகாலத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் பயணமாகியுள்ளார்.சனாதிபதி லண்டனில் இருக்கும் ஒருவாரமும் அமைச்சரவைக் கூட்டங்கள் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஜே.வி.பி முரண்பட்ட கருத்தைக் கூறிவருகிறது

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமது வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் தாரைவார்த்து விட்டு ஜே.வி.பி சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சியின் காவலாளியின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.தே.க. வினரே காரணம் என முன்னர் ஜே.வி.பி குற்றம் சுமத்தியது எனினும் அந்த தாக்குதல் ஸ்ரீபதி சூரியாராய்ச்சியின் பாதுகாவலுக்கு இருந்த பாதாள உலகக் குழு உறுப்பினரும் இராணுவத்தில் இருந்து தப்பி வந்த வருமானஒருவரை இலக்கு வைத்தேநடாத்தப்பட்டதெனப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி அரசாங்கத்தை நடத்த முடியாது

### எம்.எஸ். செல்லச்சாமி தெரிவிப்பு

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறாமல் சனாதிபதியால் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உபதலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். செல்லச்சாமி தெரிவித்துள் ளார்.

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது: சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டுமானால் அந்தக் கட்சிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைதாகி காணாமற் போனோர் குறித்து தமிழ்க் கூட்டமைப்பினர் குரலெழுப்பவேண்டும்

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

1996 மற்றும் 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர்,யுவதிகள்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பினைத் தெரிவிக் கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது: நேற்று யாழ் நகரில் இடம்பெற்ற “படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின்” கூட்டத்திலேயே இம்முடிவு

(12ஆம் பக்கம் பார்க்க)



## சனாதிபதியின் தற்போதைய கருத்துக்கள் எமக்கு தெரிவித்த கருத்திலிருந்து வேறுபடுகிறது

### தமிழரசுக்கட்சிப் பா.உ.ரவிராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த போது தெரிவித்த கருத்துக்களுக்கும் தற்போது அவர் தெரிவிக்கும் கருத்துக்களுக்கும் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எங்களிடம் சனாதிபதி அவர்கள் கூறும் போது தாங்கள் முதலில் இரண்டு விடயங்களையும் ஒன்றாகப் பேசுவது என்ற நிலைப்பாட்டிலே இருந்ததாகவும் அது இப்போது மாற்றப்பட்டு முதலிலே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளைப் பேசி ஒருமுடிவெடுத்து அந்தப் பத்திரத்திலே கையொப்பமிட்ட பின்னர் அதை அமுல் படுத்துகின்ற காலப்பகுதியில் இந்த நிரந்தரத் தீர்வு பற்றிய யோசனையை முன்வைகலாமென்று சொன்னார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதி வெதுப்பக உரிமையாளர் கவனத்திற்கு

வெதுப்பியின் மொத்த விற்பனை விலை -13ரூபா எனவும் சில்லறை விற்பனை விலை - 15ரூபா எனவும்அறிவிக்கப்பட்டிருக்கிறது. நீரெடை 400 கிராம் ஆகவும், உலரெடை 350கிராம் ஆகவுமுள்ள வெதுப்பி ஒன்றின் மொத்த விற்னை விலை 13 ரூபாவாகவும், சில்லறை விற்பனை விலை 15 ரூபாவாகவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. இவ் விலைகளுக்கிணங்க 2004.06.15ஆம் நாளிலிருந்து (12ஆம் பக்கம் பார்க்க)

# YOGI BEAUTY PARLOUR

(Academy of Beauty Culture & Hair Dressing)

HOME SCIENCE ACADEMY

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 21.06.2004 முதல் ஆரம்பமாகவுள்ளன

அழகுக் கலையும்
சிகிச்சை முறைகளும்
(Beauty Culture and Therapy)

முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும்,
மணப்பெண் அலங்காரமும்

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறைவிளக்கங்கள்
பயிற்சி அளிக்கப்படும். சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்புகொள்ளவும்.
கேக்கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 27.06.2004 பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் பயிற்சிகள் முடித்த மாணவிகள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
T.P. 222 2796

(சி: 9915)


# வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்

# பணிநிலை வேண்டுகை

பணிநிலை :- இரவுக்காவலாளி - 315/16

சம்பள அளவுத்திட்டம் :- 31/99 சுற்றுநிருபத்திற்கமைய,3250-60 10-65 10- 4500/=

புதிய சம்பள அதிகரிப்பு ரூ.1250 /-வும்

தகைமை :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐந்தாம் வகுப்புக் கல்வித் தராதரப் பத்திரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 18-45 வயது வரை இருத்தல்.

கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவினை வதிவிடமாகக் கொண்டிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பிணைப்பணம் :- பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படும் பிணைப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 25.06.2004ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ "பொதுமுகாமையாளர், வடமாகாண ப.தெ.வ. அ.கூ.நி. பேரிணையம், கண்டிவீதி, கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்,
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி.
பேரிணையம்,
கண்டிவீதி, கிளிநொச்சி,

(சி-9716)

# நீங்காத நினைவலைகள்



அன்னை மடியில் 08 . 08 . 1981

அன்னை மண்ணில் 14 . 06 . 2001

## 2ஆம் லெப். பிரியங்கா

பூவாகிப் புயலாகிப் பூகம்பமானவளே! சோதரியே!
வாகனப் பகுதியினை வாகாய் வளர்த்தவளே!
விளையாட்டுத் துறையினிலே விறுவிறுப்பாய் நின்றவளே!
தற்காப்புக் கலைகளிலே தலை நிமிர்ந்து சென்றவளே!
சோலையின் சிட்டாகி, மொட்டாகி மலர்ந்தவளே.
விடிகின்ற விடுதலைக்கு மெட்டாகிப் போனவளே!
உன் நிழல் தொடர்ந்து நிஜமாவோம்.


காந்தருபன் அறிவுச்சோலை சகோதரன் (தி.பிரசன்னா)

செஞ்சோலை சகோதரிகள்

(சி-9127)

# நீங்காத நினைவினில் ஓராண்டு

## 14-06-2004



மண்ணின் மலராய் 30 - 11 - 1976

அழிவின் சொத்தாய் 14 - 06 - 2003

## கடற்புலி லெப். கேணல் அன்புக்குமரன்

## (வல்லிபுரம் சிவகுமார்)

சிறிதர் வீதி, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

(சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் வணிகக் கப்பலைத்தாக்கிஅழித்தபோது வீரகாவியமானார்)

**வல்லை மண்ணில் பிறப்பெடுத்து வங்கக் கடலில் காவியமான - புயலே**
**உனை இழந்து ஓராண்டு ஆனதையா**
**கண்மணியே உன் பூ முகம் தேடுகின்றோம் - நீ எங்கு சென்றாய்?**
**கடலில் கயவன் பகையழித்து - பகைவென்ற வேளைதனிலே**
**காலத்தின் கட்டளைப்படி வங்கத்திலே**
**வணிகக் கப்பல் மீது உன் பணி தொடர்ந்தாய்.**
**சமாதான வேளையிலும் வஞ்சகரின் வஞ்சகத்தால் - உன்**
**உயிர் பிரிந்தாலும், ஆண்டுகள் பல ஆனாலும் - உன்**
**நினைவு எமைவிட்டு அகலாது.**

இதே தினத்தில் இவருடன் காவியமான 12 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

14-06-2004 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவலைகளில் அனைத்துப் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.மு. இரணைப்பாலை வீதி,
5ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

**குடும்பத்தினர்.**

(4591)




# இடமாற்றம்



இதுவரை காலமும் கச்சேரி முன்பாக இயங்கி வந்த "ஐயப்பா நகைமாளிகை" என்னும் அடகு நிலையம் 14.06.2004 ஆம் திகதி முதல் எமது மற்றுமொரு கிளை நிறுவனமான "தமிழ்க்கங்கை வண்ணச்சோலை" என்னும் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம். தொடர்ந்தும் எமது பணி தொடர்ந்துகொண்டே இருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்,
ஐயப்பா நகைமாளிகை.

T.P:- 2285853
2285854

(4597)

# இந்.அணுவாயுதத்திட்டத்தை விற்கமுற்பட்ட விஞ்ஞானியின் சகோதரர் டுபாயில் கைது

**இந்திய அணுவாயுதத் திட்டத்தை பணத்திற்காக விற்பனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு,ஐக்கிய எமிரேட்டில் இந்திய வர்த்தகப் பிரமுகரும் அணுவிஞ்ஞானியின் சகோதரருமான அக்தர்குஷேன் அகமட் கைது செய்யப்பட்டுள்ளார்.**

ஐக்கிய எமிரேட்டில் கைது செய்யப்பட்ட இந்தவர்த்தகப் பிரமுகர் அக்தர்குஷேன் அகமட் விசாரணைகளுக்காக மும்பைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். இவரிடம மத்திய புலனாய்வு துறையினர் விசாரணைகளை நேற்றுத் தொடங்கியுள்ளனர்.

டுபாயில் இந்த வர்த்தகப் பிரமுகர் இந்திய அணுவாயுத இரகசியங்களை ஐக்கிய எமிரேட்டின் நேச நாடுகளிடம் வெளியிட முயன்ற போதே, டுபாய்க் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்த வர்த்தகப் பிரமுகர் இந்தியாவில் அணுவிஞ்ஞானியாக இருக்கும் தனது சகோதரரிடமிருந்து அணுவாயுத இரகசியங்களைப் பெற்றுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அணுவாயுத விஞ்ஞானியாகவுள்ள வர்த்தகப் பிரமுகரின் சகோதரர் மீதும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மும்பை பொலிசார் கூறியுள்ளனர்.

# ஈராக்கில் கார்க்குண்டு வெடிப்பு 4 பொலிசார் உட்பட 12பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென்கிழக்குப் பகுதியில் பொலிஸ் ரோந்துக்குழு மீது கார் வெடி குண்டு தற்கொலைத் தாக்குதல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் நான்கு பொலிசார் உட்பட 12பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் கூட்டுப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களது உடல்கள் உருத்தெரியாதளவு கருகியிருந்தன. இதேவேளை நேற்று வடமேற்கு பாக்தாத்தில் கல்வித்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கார்க்குண்டு வெடிப்பு இடம் பெற்றதைத் தொடர்ந்து கார் தீப்பற்றி எரிந்தது. இதனால் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த பொலிசாரும் பொதுமக்களும் தீக்குள் சிக்குண்டு கருகவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் பாரிய குழி ஏற்பட்டுள்ளதாகவும் கூட்டுப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# அமெ.பொறியியலாளர் சவுதியில் சுட்டுக்கொலை

### சித்திரவதைக்கு பழிவாங்கலென அல்–ஹைதா அறிவிப்பு

(றியாத்)

சவுதிஅரேபியாவில் அமெரிக்க பொறியிலாளர் போல்ஜோன்சனை நேற்று முன்தினம் அல்-ஹைதாவினர் கடத்திச்சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்தவாரம் அமெரிக்கர் ஒருவரைச் சுட்டுக் கொண்டுள்ளது தெரிந்ததே. ஈராக்கில் சிறைக்கைதிகள் அமெரிக்க இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டமைக்குப் பதில் நடவடிக்கையாகவே இச்சம்பவங்களைத் தாம் செய்ததாக அல்-ஹைதாவினர் தெரிவித்துள்ளனர்.



ஈராக்கில் கர்பாலா நகரில் வாகனங்களில் ஆயுதங்களை ஏற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள்.



1983 ஆம் ஆண்டு தொடங்கி ஹவாய்த் தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் பசுபிக்கடலில் 500 ஏக்கர் பரப்பளவு கொண்ட பல தீவுகள் உருவாகியுள்ள நிலையில் ஒருவருட இடைவெளிக்குப் பின் மீண்டும் ஒரு எரிமலை வெடிப்பு கடந்த மே 30ஆம் நாளில் ஏற்பட்டுள்ளது.

# பிரஜாவுரிமைச் சட்டத்தை கடுமையாக்க அயர்லாந்து முடிவு

(லண்டன்)

பிரஜாவுரிமை சட்டங்களை அயர்லாந்து அரசு மிகவும் கடுமையாக மேற்கொள்ளவுள்ளது.

ஐரோப்பிய சமூகத்தைச் சேராத நாடுகளைச் சேர்ந்தவர்கள் அயர்லாந்திற்குள் நுழைந்து குழந்தைகளைப் பெற்றபின்னர் அக்குழந்தைகளுக்கு அயர்லாந்து பிரஜாவுரிமை கோருவதைத் தடுப்பதே சட்டத்தைக் கடுமையாக்கக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு திருத்தங்களைக் கொண்டுவருவது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்ற வேளை அயர்லாந்து பிரஜைகள் இச்சட்டத்திற்கும் அரசியல் யாப்பில் திருத்தங்களைக்கொண்டு வருவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். 20 சதவீதமானோர் மட்டும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வைகோவிற்கு அமெ.இல் வரவேற்பு

(வோஷிங்டன்)

தற்போது அமெரிக்காவிற்குச் சென்றுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவிற்கு அமெரிக்காவிலுள்ள தமிழ் மக்கள் எதிர் வரும் 19 ஆம் திகதி பொது வரவேற்பு அளிக்கவுள்ளனர்.

# "பிரமோத்" ஏவுகணை இந்.நேற்றுப் பரீட்சிப்பு

(சென்னை)

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து கூட்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட "பிரமோத்" என்ற ஏவுகணை நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது.

இந்தியாவின் ஓரிஷா மாநிலம் பாலாபூர் அருகே பாண்டிபூர் ஏவுகணைத் தளத்தில் இருந்து இந்த ஏவுகணை விண்ணில் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை எட்டு மீற்றர் நீளமும் மூன்று தொன் எடையும் கொண்டதென இந்திய பாதுகாப்பு அமைச்சரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுப் பிற்பகல் 12.15 மணியளவில் இந்த ஏவுகணை பரீசிலித்துப்பார்க்கப்பட்டது. இது 290 கிலோ மீற்றார் தொலைவிலுள்ள இலக்கினைத்துல்லியமாகத் தாக்கக் கூடிய வல்லமை பெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏவுகணைக் கப்பலிலும், நீர்மூழ்கிக் கப்பலிலும், விமானத்திலும்இலகுவாக எடுத்துச் செல்ல வடிவமைக்கப்பட்டுள்ளது.

கப்பல் ஒன்றில் இருந்து விண்ணில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை வினாடிக்குப் 14 கிலோ மீற்றர் வேகத்தில் அதாவது ஒலியைவிட இருமடங்கு வேகத்தில் பாய்ந்து சென்று தாக்கக் கூடியது.

இலக்கை நெருங்குவதற்கு இருபது கிலோ மீற்றருக்கு முன்னதாக தாக்குதல் திசையை தனாகவே மாற்றக் கூடிய வகையில் இந்தப் "பிரமோத்" ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நேட்டோ மாநாட்டை எதிர்த்து துருக்கியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

துருக்கியில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் அங்காராவில் எதிர்ப்பாளர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வட அத்திலாந்திக் நாடுகளின் இராணுவ கூட்டமைப்பான நேட்டோ மாநாடு வரும் 28ஆம் திகதி துருக்கியில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ், பிரிட்டின் பிரதமர் டொனி பிளேயர் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம் மாநாட்டில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்று வரும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றியும் சர்வதேசத் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்படும்.

இந்நிலையில் நேட்டோ மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் எதிர்ப்பாளர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் மூண்டது. இதனால் அங்கு பெரும்பதற்றமும் ஏற்பட்டது.

# சாராயம் அருந்திய 12பேர் ஈரானில் உயிரிழப்பு

(தெக்ரான்)

ஈரானில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட சராயம் அருந்திய 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 20பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5பேர் கண்பார்வை இழக்கும் நிலையில் உள்ளதாக தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக 14 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.



செர்பியாவில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் தேர்தல் கூட்டமொன்றில் ஹார்ட்லைன் தேசிய கட்சி வேட்பாளரான டுமிஸ்லோ நிகோலி ஆதரவாளர்களுக்கு கையசைக்கிறார்.


## சபாநாயகர் அறிவுரை

(புதுடில்லி)

மக்களவை உறுப்பினர்கள் அவையில் நாட்டின் வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகள் கிராமப்புற ஏழைமக்களின் பிரச்சினைகள், வேலையின்மை எழுத்தறிவின்மை போன்ற பிரச்சினைகளையே எழுப்ப வேண்டும்.

இவ்வாறு மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி எதிர்க்கட்சிகளின் மக்களவை மாநிலங்களவைப் புறக்கணிப்புப்பற்றி விபரிக்கையில் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

தாம் மக்களவை சபாநாயகராகப் பதவியேற்ற முதல்நாளே மக்களவையில் ஊழல் குற்றச்சாட்டு என்று எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் அமைந்தன என்றும் அவர் கூறினார்.



ஹொனலுலு நகர மண்டபத்திலுள்ள மன்னர் காமே ஹமேகாவின் உருவச் சிலை மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட காட்சி.

# பூநகரியில் மீன்பிடிப்படகுகள் அத்துமீறலால் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்பு!

## -தடுத்து நிறுத்த அரச அதிபரிடம் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**பூநகரி கடற்பரப்பில் பிறமாவட்ட மீன்பிடிப்படகுகள் மற்றும் இந்திய மீன்பிடி றோலர்கள் அத்துமீறி மீன்பிடித்தொழிலினை மேற்கொண்டு வருவதன் காரணமாக பூநகரிப்பிரதேச கடற்றொழிலாளர்கள் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருவதாக கிளி. அரச அதிபருக்கு முறையிட்டுள்ளனர்.**

இது தொடர்பாக கிளி. அரச அதிபர் தி.இராசநாயகத்துடன் தொடர்பு கொண்டபொழுது அவர் தெரிவிக்கையில்;

ஏற்கனவே யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் மீன்பிடிப் படகுகள் பூநகரிக் கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலினை மேற்கொண்டு வருவதாகப் பூநகரிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் தன்னிடம் முறையிட்டதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட மீன்பிடித் திணைக்கள ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கிய பொழுது இதற்கான நடவடிக் கையினை உடன் மேற்கொண்டு பூநகரிக் கடற்பரப்பில் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வருவதனைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தும், தொடர்ந்தும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் இக்கடற்பரப்பில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிய வந்துள்ளதெனவும், அத்துடன் இந்தியக் கடற்றொழிலாளர்களின் இழுவைப் படகுகள் இக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து, மீன்பிடி வலைகளை அறுத்து, துவசம் செய்வதினாலும் இப்பகுதி மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் எனவும், மீண்டும் இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையினை தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சோ,கு)

## அணைக்கட்டை சீராக்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக் குளக்கட்டில் உள்ள அரிப்பைச் சீர்செய்வதற்காக அவசிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. நியாப் திட்டத்தினூடாக இப் புனரமைப்புப் பணி பல மில்லியன் ரூபா செலவில் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது. (மி)



வீதிகளில் பயணிப்போர் போக்குவரத்து விதிமுறைகளை அனுசரித்து நடக்காது காண்பிக்கும் அலட்சியமே நாளாந்தம் நடக்கும் விபத்துக்களுக்கும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் முக்கிய காரணம். பரந்தன்- புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் அலட்சியமாக பயணிக்கும் மூவரையே இங்கு காண்கின்றீர்கள். (படம்-சசி)

## மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம் அமைக்க கிளிநொச்சியில் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.



பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கிளி. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முரளி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் சிவசொரூபநாதபிள்ளை, கிளி. மாவட்ட அரச செயலகத் திட்டப் பணிப்பாளர், உதவித் திட்டப் பணிப்பாளர்கள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி கலந்துரையாடலின் போது கிளி.மாவட்டத்தில் கிளி, பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பளை ஆகிய பிரதேச ரீதியாக செயற்பெற்று வரும் கடற்றொழிலாளர் சங்கங்கள் அனைத்தினையும் ஒன்று சேர்த்து மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம் அமைப்பதற்கான முன் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பெற்றதுடன்.

கடற்றொழிலாளர் சமாசம் உருவாகும்போது சகல கடற்தொழிலாளர்களுக்கும் கிடைக்கப் பெறவுள்ள நன்மைகள் குறித்தும் அரச அதிபர் பிரதிநிதிகளுக்குத் தெளிவு படுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சோ.கு)

### வேலி அமைப்பு

பளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் பளை பொதுச் சந்தைக்கு சுற்றுவேலி அமைக்கப் பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த பின் பிரதேசசபையால் மேற்படி சந்தை திறந்து வைக்கப்பட்டது.

அன்றிலிருந்து இதுவரையும் கால் நடைகள் தங்குமிடமாகத் தான் சந்தை இருந்தது. பலமுறை வியாபாரிகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் ஊடாக பிரதேசசபைக்கு தெரியப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (11)

## 'தரைமீன்கள்' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

மல்லிகைப் பந்தல் வெளியீடான ச.முருகானந்தனின் 'தரை மீன்கள்' சிறுகதைகளின் தொகுதி வெளியீட்டு விழா நாளை 15 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி கா.சுயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இச் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், இலக்கிய ஆர்வலர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தியை கௌரவிக்கும் வகையில் 'இது எங்கள் தேசம்' நூல் தொகுதி வழங்கலும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## -சர்வதேச தரத்திலான- தொழில்நுட்பச் சான்றிதழ்கள் கிளி.தொ.நு. நிறுவனத்தில் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும், ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களிற்கும் சர்வதேச தரத்திலான சான்றிதழ் (லண்டன் சிற்றி யாங்கிள்) வழங்கப்படவுள்ளது.

மின்னிணைப்பு, உலோக இயந்திரவியல் , மரவேலைத் தொழில்நுட்பப்பயிற்சி, பொருத்துதல் மற்றும் குழாய்வேலைகள், கட்டுமாண வேலைகள், குழாய்நீர் அமைத்தல் ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு. செய்முறைப் பரீட்சை நடைபெற்று, அதன்பின் இச்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பங்களை எதிர்வரும் 25.06.2004 இற்கு முன் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாமென நிறுவன முதல்வர் தி.பிரபாகரன் தெரிவித்துள்ளார். (சோ,கு)

## சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பொ.மே.நி.பிரசுரம் விநியோகம்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினர் சூழல் பாதுகாப்புத் தொடர்பாக சூழலையும், கடலையும் முன்னிலைப்படுத்திப் பலதுண்டுப் பிரசுரங்களை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வழங்கி வருகின்றனர்.

இத்துண்டுப்பிரசுரங்களில் "கடலின் மடியில் இந்த உயிர்க் கொல்லிகளை விதைத்தவன் யார்?, இயற்கையை அழிக்காது இருக்க இனியாயினும் ஒருவிதி செய்வோம்!, இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்!, உங்களால் வானத்தை விற்கவோ வாங்கவோ முடியுமா?, எங்களின் தேவை இறந்த கடலா? உயிர்க்கடலா?, எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம், பிளாஸ்ரிக்! அழிவுக்கு வித்திடும் அழிக்கமுடியாத ஆக்கம்" போன்ற தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரங்களைக் கிழக்கு மாகாணத்துக்குவழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (15)

## கருவேலன்கண்டல் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கருவேலன்கண்டல் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் கடந்த வியாழனன்று திறந்து வைக்கப்பட்டது.

கெயார் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முல்லை.அகதிகள் புனர்வாழ்வுக்கழத்தால் அமைக்கப் பட்ட கருவேலன்கண்டல் பொதுநோக்கு மண்டபம் திறப்பு நிகழ்வு முல்லை.அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தேசியக்கொடியினை மாவீரர் கண்மணியின் தந்தை கா.கந்தவனம் ஏற்றினார். மங்கல விளக்கை கெயார் வன்னி அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் சந்திரமோகன், முல்லை.மாவட்ட நியாப் பிரதிநிதி பிரதாப் ஆகியோர் ஏற்றினர். பெயர்ப்பலகையினை கருவேலன் கண்டல் கிராம அலுவலர் பகிரதன் திரைநீக்கம் செய்து வைத்தார்.கெயார்த்திட்ட இலங்கைக்கான பணிப்பாளர் நாடாவை வெட்டி இம்மண்டபத்தைத் திறந்து வைத்தார். (05)

## -நியாப் திட்டத்தின் கீழ்- புனரமைப்பு இழுத்தடிப்பால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஊரியான் பகுதியில் நியாப் திட்டத்தினரால் புனரமைப்



பிற்காகத் தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் கிரவல் பறிபட்டு நீண்ட காலமாக வேலை நடைபெறாததால், போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாக இருப்பதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவி கின்றனர்.

நியாப் திட்டத்தினரால் 2003 ஆம் ஆண்டு புனரமைப்புச் செயற்பாட்டுக்காக கண்டாவளை பிரதேசத்தில் தெரிவு செய்யப் பட்ட கிராமங்களில் ஒன்றான ஊரியான் கிராமத்தில் குளம், பொது மண்டபம், பொதுக்கிணறுகள், வீதிகள் என பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குளம் ,பொது நோக்கு மண்டபம் என்பன புனரமைக் கப்பட்டும் புதிதாக அமைக்கப் பட்டும் வருகின்றன. இவற்றுக்கு பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டே வேலைகள் நடை பெறுகின்றன, ஆனால் வீதிகளைப் புனரமைப் பதற்காக வீதிகளில் கிரவல் பறிக் கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் வேலைகள் நடை பெறாததால் போக்குவரத்து பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளது.

தற்போது நெற்செய்கைக் குரிய காலமாகையால் உள்ளீடுகளையும், வளமாக்கிகளையும் கொண்டு செல்வதற்கு உழவு இயந்திரம் மற்றும் ஏனைய வாகனங் களின் பயன்பாடுகள் அதிகரித் திருக்கிறது. எனினும் மக்கள் மேற்படி செயற்பாடுகளை மேற் கொள்ள முடியாது பெரும் சிரமங் களுக்குள்ளாகி வருகின்றனர்.(ச).

# வடமராட்சியில் அகதி முகாம்களிலுள்ள மக்கள் அடிப்படைவசதிகளின்றி அவலம்

## மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை லூர்த்து மாதா அகதி முகாம், தும்பளை லட்சுமணன் தோட்டம் அகதிமுகாம்,கற்கோவளம் அகதி முகாம் ஆகிய இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப் படைவசதிகள் அற்ற அவல வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.**

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயந்த குடும்பங்களில் 30 குடும்பங்கள் பருத்தித்துறை லூர்த்துமாதா அகதிமுகாமிலும்,20 குடும்பங்கள் தும்பளை லட்சுமணன் தோட்ட அகதிமுகாமிலும் 26 குடும்பங்கள் கற்கோவளம் அகதி முகாமிலும் அடிப் படைவசதிகள் அற்ற நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

எதுவித உதவி வழங்கல்களும் அற்ற நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வரும் இக்குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்த முன் வருமாறு யாழ் மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கங்களின் சமாசம் உதவி வழங்கும் தொண்டர் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் இங்குள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளது. (33)

# விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை யாழ்.இல் அதிகரிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் இவ் ஆண்டு ஆரம்பமானதிலிருந்து இற்றைவரை 9பேர் விசர்நாய்க் கடிகளுக்கு இலக்காகி உயிரிழந்திருப்பதுடன். பல நூற்றுக்கணக்கானோர் விசர்நாய்க்கடிகளுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுபெற்றுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு விசர்நாய்க் கடிகளுக்கு இலக்காகி உரியமுறையில் சிகிச்சை பெறாமையாலேயே மேற்படி 9பேரும்விசர்நாய்க்கடித் தாக்கங்களுக்கு இலக்காகி உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே விசர்நாய்க் கடி குறித்து மக்கள் விழிப்புடன் செயற்படுதல் வேண்டும் என சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது (33)



சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நிக்கோட் திட்டத்தின் கீழ் 55 லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட பிரசவ விடுதியினைத் திறந்து வைத்த ஆசியஅபிவிருத்தி வங்கி வதிவிடப்பிரதிநிதி கூனி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உபதலைவர் லிகுட்ஜின ஆகியோரைப் படத்தில் காண்க.

# பாடநூல்கள் சில இன்னும் வழங்காமை குறித்து யாழ். அரசசார்பற்ற இணையம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குரிய பாடநூல்கள் இன்னமும் முழுமையாக வழங்கப்படாமை குறித்து யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளுக்கு இன்னமும் தொழில் நுட்பம், ஆங்கிலம், வணிகக்கல்வி உட்பட சில பாடங்களுக்கான பாடநூல்கள் விநியோகிக்கப்படவில்லை.

அரைவருடம் முடிவடைந்துள்ள நிலையில் இந்த ஆண்டுக் குரிய பாடநூல்கள் இதுவரை வழங்கப்படாதிருப்பது மாணவரின் கல்வியை வெகுவாகப் பாதிக்கும் எனத் தெரிவித்துள்ளதோடு இதனால் மாணவர்களின் கல்வி உரிமைகள் பாதிக்கப்படுகின்றமையைச் சுட்டிக்காட்டியுள்ள யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அது குறித்து தமது ஆட்சேபத்தையும் வெளியிட்டுள்ளது. (33)

# தமதுகாணிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்ற கோப்பாய் விவசாயிகள் கோரிக்கை

## -யாழ். அரசஅதிபரிற்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் மத்தியில் உள்ள விவசாய நிலங்களில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்பிரதேச விவசாயிகள் யாழ். அரசஅதிபர் செ. பத்மநாதனிடம் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் மேற்படி பிரதேசங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்படாததனால் அப்பகுதிகளில் உள்ள பல ஏக்கர் நிலப்பரப்புக்கள் செய்கைபண்ணப்படாத நிலையில் உள்ளன.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான விவசாயிகள். பாதிக்கப்படுகின்றனர். என்பதை சுட்டிக்காட்டியுள்ளஇப்பகுதிவிவசாயிகள் அங்கு புதைத்து வைக்கப்பட் டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறும் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். (33)

# மருதனார் மடம் சந்தியில் பேருந்து தரிப்பு நிலையம்

## -கட்டட நிர்மாணத்திற்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார்மடம் சந்தியில் புதியதொரு பேருந்து நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் சீரானதொரு போருந்துத்தரிப்பு நிலையம் இன்மையால் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைக் கவனத்தில் கொண்டு அமைக்கப்படவுள்ள இப் பேருந்துத் தரிப்பு நிலையத்தின் கட்டட நிர்மானப் பணிகளுக்காக முதற்கட்டமாக 1லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை சுன்னாகப் பிரதேசசபை ஒதுக்கீடு செய்துள்ளது. (33)



கைதடி முதியோர் இல்ல முதியவர்களின் சமாதான ஆன்மீகச் சுற்றுலா பயணம்

## கண்காட்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிடையிலான சமூகவியல் கண்காட்சிப் போட்டி ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தப்படவுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களினிடையே நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கு ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 3 பேர் மட்டும் போட்டிகளில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், சமூகவியல் சம்பந்தமான வரிப்படங்கள், வரைபடங்கள், மாதிரி உருவங்கள் மற்றும் ஆக்க வகைகளை மாணவர்கள் போட்டிக்காக தயார் செய்து சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரியவருகிறது. (33)

# வீதிவிளக்கு செயலிழப்பு கொள்ளைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய்ப் பகுதியில் உள்ள வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் நீண்டகாலமாகச் செயலிழந்துபோயுள்ளன.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் மின்சாரசபையினரிடம் முறைப்பாடு செய்துள்ளபோதும் உரிய நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதிகளில் உள்ளவீதிகள் பலவற்றிலும் இரவு நேரங்களில் வழிப்பறி, திருட்டு போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே இவற்றைக்கருத்திற்கொண்டு செயலிழந்து போயுள்ள வீதி மின்விளக்குகளைத் திருத்தம் செய்து ஒளிரவிடுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# பாராளுமன்ற வன்முறைக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமாட்டோம்

## - சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக எவ்வித சட்டநடவடிக்கைகளையும் எடுக்கமாட்டோமென ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிசாருக்கு தகவல்களையும் வாக்கு மூலங்களையும் அளிப்பதற்கு மறுத்துள்ளனர். ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவிக்கையில் சட்டத்துறையைவிட சமயத்திற்கே தமது கட்சி மதிப்பளிக்கு மெனத் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றில் தமது பெரும்பான்மைபற்றி 6எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு அறிவிக்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, சிறில முஸ்லிம் கட்சி, மலையக மக்கள் முன்னணி ஆகியன இணைந்த கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்றில் தமக்கிருக்கும் பெரும்பான்மை பற்றி இவ்வாரம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப் போவதாக கூறியிருக்கிறது.

பாராளுமன்றில் இக்கூட்டணிக்குப் பெரும்பான்மை இருப்பதாகக் கூறிக் கொண்டாலும் ஆளும் ஐ.ம.சு. முன்னணிஆட்சிப்பீடம் ஏறியிருப்பதால் அரசின் தேர்தல் சட்டவிதிகளுக்கேற்ப இன்னும் மூன்று மாதத்துள் ஆளும் கட்சி தனது பெரும்பான்மையை நிரூபிக்காத பட்சத்தில் அரசியலமைப்புக்கு ஏற்ப கடும்நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவை எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேற்படி கட்சிகளின் தலைவர்கள் இவ்வாரம் கூடி ஆராயவுள்ளனர் ஆளும் கட்சி எம்.பிக்கள் சிலர் அண்மையில் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டதைப்போல் மீண்டும் நடைபெறாது தடுக்கவும், பாராளுமன்றக் கௌரவத்தை நிலைநாட்டப் பல முடிவுகளை எடுக்கவும் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்ல முற்பட்ட 38 பேர் கைது

(கொழும்பு)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்வதற்கு முயற்சித்த 38 பேரை வெலிகம பொலிசார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

இவர்களில் 20 பேர் தமிழ் இளைஞர்கள். சட்ட விரோதமாக இத்தாலிக்கு அழைத்துச் செல்வதாக கூறிய முகவருக்கு ஒவ்வொருவரும் 5 இலட்சம் ரூபா வழங்கியுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து முகவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# “மீண்டும் சிக்கலுக்குள்ளாகும் அரசியல் நூற்பந்து”



கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் சிறிலங்காவின் அரசியலில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிட்டதாகவே கருதப்பட்டது. எனினும் அரசியல் நூற்பந்து மீண்டும் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது. ஆளும் கட்சிக்குள் மட்டுமன்றி எதிர்க்கட்சிக்குள்ளும் தற்போது சிக்கலை ஏற்படுத்துவதாக காணப்படுகிறது. காரணம் எதிர்க்கட்சி பெரிதும் முயற்சிப்பது ஆளும் கட்சிக்குள் எப்படியாவது பிரச்சினையை ஏற்படுத்தவே. ஆளும் ஐ.ம.சு. முன்னணி ஆட்சிக்கு வந்து 2 மாதங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அது தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆட்சியைத் தற்காத்து வைத்திருப்பதற்கான பெரும்பான்மையை நிரூபித்தல், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல், சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுதல், பொதுத்தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் போன்ற பல பிரச்சினைகளில் ஆளும் கட்சி சிக்கித்தவிக்கிறது. அதேபோன்று தேர்தலில் தோற்ற எதிர்க்கட்சியும் தோல்விக்கான காரண காரியங்களை ஆராய்ந்து கட்சியைப் புனரமைக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது. அத்துடன் இவர்கள் தமது கட்சியில் சனநாயகத்தைப் பலப்படுத்திக்கொண்டு அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் சில அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அதனால் அது மாகாண சபைத் தேர்தலைக் கூட அலட்டிக்கொள்ளாமல் இருப்பதாகப்படுகிறது மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஆளும் கட்சியை விட எதிர்க்கட்சியே பெரும் பிரச்சினைக்குள்ளாகப் போகிறது.

அது தற்போது சமாதானம் பற்றியும், நாட்டின் பொருளாதாரம் பற்றியும் வெளியிடும் கருத்துக்களை சமூகம் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றது. புதிய அரசு இன்னும் பேச்சுக்களை ஆரம்பிக்கவில்லை. ஐ.தே.முன்னணி அரசு விட்ட இடத்திலிருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது ஒரு முயற்சியாகும். இதுவும் சுலபமானதல்ல. அதற்கிடையில் ஆளும் கட்சி மீது ஐ.தே.க.வினரின் மேலும் ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. அதாவது மக்களுக்கு அளித்த நிவாரணங்களையும் சம்பள உயர்வுகளையும் அரசு வழங்குமாயின் பொருளாதாரம் மேலும் பின்னடைவு காணும் என்பதாகும். அக்கட்சி தேர்தலுக்கு முன்னிருந்த நிலையிலேயே தற்போதும் இருப்பதானது இருளில் தட்டுத்தடுமாறும் நிலையை ஒத்ததாகும்.


அக்கட்சி மீது மக்கள் வெறுப்படைந்ததாலேயே ஐ.ம.சு.முன்னணியை ஆட்சிபீடம் ஏற்றினர். அக்கட்சியும் மக்கள் மீதிருந்த சுமையை நீக்கும் பொருட்டு பசளை மானியத்தை அதிகரித்து, அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பை வழங்க முன்வந்திருக்கிறது. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பையும் அறிவித்துள்ளது.

எதிர்காலத்தில் எது நடைபெற்றாலும் தற்போது அரசு மேற்கொள்ளும் முயற்சிகளைத்தவறாகக் கொள்ளமுடியாது. பொதுத் தேர்தலின் போது ஐ.தே.முன்னணி மக்களிடம் “ஐ.ம.சு முன்னணிக்கு வாக்களித்தால் பொருளாதாரம் படுகுழியில் வீழும். ரூபாயின் மதிப்பு குறைந்து விடும் , பங்குச்சந்தை வீழ்ச்சியுறும், வட்டிவீதம் அதிகரிக்கும்” என்றெல்லாம் பிரச்சாரம் செய்தது. அவ்வாறு இந்த ஆளும் கட்சியின் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றாலும் ஐ.தே. முன்னணி கூறியபடி செயற்படவில்லை என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றனர். அதனைக் கட்சியும் அறியும். பொதுமக்களுக்கு வட்டி வீதம் அதிகரிப்பு பங்குச்சந்தை வீழ்ச்சி என்பவை பற்றி அக்கறை கிடையாது. அன்றாட வாழ்க்கை பற்றிய கவனமே அவர்களுக்குண்டு. சில வேளை அதுவே அரசியலைத் தீர்மானிக்கும் ஒன்றாகவும் இருக்கலாம்.

இந்த அரசும் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்தே வெற்றிபெற்றது. ஆயினும் பாராளுமன்றில் பெரும்பான்மையைப் பெற அது தவறிவிட்டது. ஆயினும் அக்கட்சி மக்களுக்கு சில வாக்குறுதிகளை அளித்திருக்கிறது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க முடிவு செய்துள்ள அரசு தற்போது ஜே.வி.பி, ஹெல உறுமய கட்சிகளின் எதிர்ப்பையும் சமாளிக்கவேண்டிய நிலையில் இருக்கின்றது. இந்த முயற்சியும் 1956ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தத்துக்குச் சமமானதாகும். தம்மைப் பதவியிலிருத்திய பிக்குமார்களே அவ்வொப்பந்தத்தை அன்று எதிர்த்ததால் பிரதமர் அதனைக் கிழித்தெறிந்தார். இன்று சந்திரிகா முகம் கொடுத்திருப்பதும் அவ்வாறானதொரு நிலைக்கே. வெளிநாட்டு உதவியைப்பெற வேண்டுமாயின், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமாயின், சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்ல வேண்டும். தற்போது அக்கட்சிக்குள்ளேயே பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி முதல் இன்று வரை நடைபெற்ற 4 பாராளுமன்றக் கூட்டத் தொடரில் 3அமளி துமளியில் முடிவடைந்திருக்கின்றது. ஒரு சட்ட மாசோதாவை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சாதாரண பெரும்பான்மை கூட இந்த ஆளும் ஐ.ம.சு முன்னணிக்குக் கிடையாது.



இதன்படி இந்த அரசு இன்றும் சிறுபான்மை அரசாகவே காணப்படுகிறது.

அது தனது பெரும்பான்மையை அதிகரிக்க எடுக்கும் நடவடிக்கைகள் கூட இப்போது அக்கடசிக்கே தோண்டப்பட்ட குழியாகிறது. அதாவது ஹெல உறுமயவின் ஆதரவைப்பெற முயன்று அவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதுவே அந்தப்பிரச்சினையாகும்.

இதற்கிடையில் தற்போது சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதியை அதிகரிக்கும் வழியை ஆராய்ந்து அவற்றை நிர்வகிக்கும் விடயத்திலும் வரவு-செலவை கணக்கிடுவதற்கு ஏற்ற முகாமைத்துவம் ஒன்று இல்லாதிருப்பதும் மேலும் ஒரு சிக்கலாகிறது. உலக சந்தையில் கடனுதவிகளைக் கூடுதலாகப்பெற அரசு முயல்கிறது எனினும் இதனால் வேறு தீய விளைவுகளும் ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவை இவ்வாறிருக்க நாட்டில் அரிசி, மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. இது தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் எத்தனை சமாதானம் சொன்னாலும் விலையேற்றத்தை அவரால் தடுக்க முடியாது.

ஒரு மாற்றத்துக்காக ஜே.வி.பியினருக்கு வாக்களித்த மக்கள் அவர்களின் நடவடிக்கை பற்றியும் இப்போது எதிர்பார்க்கின்றனர். ஆயினும் ஜே.வி.பி பழைய குப்பையையே கிளறுகின்றது. வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்து தற்போது கல்லெறிகளில் இருந்து தப்பிக்க முயல்கிறது.

எனினும் இந்த நிலை எமக்குப் புதுமையான ஒன்றல்ல. உலகில் 3 ஆம் நிலை நாடுகளில் இவ்வாறான அரசியல் பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கமாகவே இருந்து வருகிறது. தற்போதைய ஆளும் கட்சியைப் பரீட்சித்துப் பார்க்கும் போது ஓர் உண்மை புலனாகிறது. அதாவது முன்னைய ஐ.தே. முன்னணி அரசைவிட ஆளும் ஐ.ம.சு.முன்னணி ஏழை மக்களுக்கு அதிக நிவாரணம் வழங்க முனைகிறது என்பது உண்மை. ஏழைகளையும் கிராம மக்களையும் மறந்த ஐ.தே.முன்னணி இன்னும் வெளிநாட்டுக் கொள்கைகளிலேயே மூழ்கியுள்ளது. அதனைத் தவிர்த்தாலன்றி மீண்டும் ஆட்சியமைக்கும் என்பது சந்தேகம் மட்டுமன்றி அக்கட்சி இழைக்கும் அடுத்த பெரும் தவறாகும்.

**(லங்கா தீப) மொழியாக்கம். வடிவேல்**

# சூழல் விழிப்புணர்வு மாதத்தில் பார்த்தீனியம் களைகள் அழிப்பு

சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பார்த்தீனியம் தேடி அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக நேற்று முன்தினம் கிளிநொச்சி நகர்ப் பகுதியில் பார்த்தீனியம் அழிக்கும் நடவடிக்கை நடைபெற்றுள்ளது. இதனைக் கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

த.பொ.மே.நிறுவன கிளி. மாவட்டப் பொறுப்பாளர் மு.செந்தில் நெறிப்படுத்தலில் பார்த்தீனியம் தேடி அழிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்றது. இதில் த.பொ.மே.நிறுவன கிளி/மாவட்டப் பணியாளர்கள் பார்த்தீனியம் தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்களுடன் கால்நடை வளர்ப்போர் அபிவி ருத்தி சங்கப் பணியாளர்களும்கலந்து கொண்டனர். தொடர்ந்தும் கிளி. நகர்ப்பகுதி அக்கராயன்,முழங்காவில் ஆகிய பகுதிகளில் பார்த்தீனியம் தேடி அழிக்கும் பணி நடை பெறவுள்ளதாக கிளி.'.மாவட்ட த.பொ.மே. நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வீதி விபத்தில் இருவர் காயம்

வட்டக்கச்சி நாவலர் வீதிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று காலை 10.00 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்சன் வீதி நோக்கி வந்த துவிச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர்மோதிக்கொண்டது. மோட்டார்சைக்கிள் சேதத்துக்கு உள்ளாகியதுடன் அதில் பயணித்த இருவரும் காயங்களுக்கு உள்ளாகினர். துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் எந்தவித சேதமும் இன்றித் தப்பியுள்ளார்.

# வலுவூட்டல் வளாக மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி

(செட்டிகுளம்)

வவுனியா வலுவூட்டல் வளாக மாணவர்களின் வருடாந்த விளையாட்டு போட்டிநேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற் பகல் வவுனியா தேக்கவத்தை பொது மைதானத்தில் நடைபெற்றது.

சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது வவுனியாவினைச் சேர்ந்த வலுக்குறைந்த மாணவர்கள் 95 பேர் பங்கு பற்றினார்கள்.

இந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட நீதவான் எம்.இளஞ் செழியன் கலந்து கொண்டார்.

தேசிய ரீதியில் கடந்த ஆண்டு இடம் பெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு இவ் வலுகுறைந்த மாணவர்கள் 24 தங்கப்பதக்கங்கள் உட்பட 41 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வலுகுறைந்த மாணவர்களினைப்பராமரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உடல் வலுவையும் மேம்படுத்துவதில் சீட் நிறுவனம் செயற்பட்டுவருகின்றது.




## 03.

➡ அமெரிக்காவின் உளவுத்துறை நிறுவனமான சி.ஐ.ஏ.யின் இயக்குநர் ஜோர்ஜ் கெனட் டின் பதவிவிலகல் குறித்து அமெரிக்க சனாதிபதிக்கு அறிவிப்பு. 24 மணிநேரத்தில் இரண்டாவது அதிகாரியான சென் பரிட்டும் பதவிவிலகல்.

## 04

➡ பீகாரில் கிராமமொன்றில் உள்ள செங்கல் சூளையினுள் புகுந்த இனந்தெரியாதவர்களினால் 10 கிராமமக்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

➡ அணுகுண்டுகளைத் தாங்கிச் செல்லும் ஆற்றலுடைய ஏவுகணையைப் பாகிஸ்தான் வெற்றிகரமாகப் பரிசோதித்தது. இது ஒரு வாரத்தில் இடம் பெற்ற இரண்டாவது பரிசோதனை.

## 05.

➡ பிரான்ஸிற்கு விஜயம் செய்த அமெரிக்க சனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம். சனாதிபதி புஷ் போர்க் குற்றவாளி எனச் சித்திரிக்கும் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர் காணப் பட்டனர். இதில் பிரான்ஸில் தங்கியிருக்கும் அமெரிக்கர்களும் காணப்பட்டனர்.

➡ சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் பொலிசாருடன் தீவிரவாதிகள் கடும்மோதல். சவுதி அரேபியாவின் முக்கிய நகரமான இங்குள்ள பிரதான வீதியொன்றில் ஒருமணிநேரம் இச்சமர் இடம்பெற்றது. இது அல்-ஹைதா தீவிரவாதிகளின் நடவடிக்கை சவுதி அரேபியாவில் தீவிரமாகி வருவதைக் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## 06


றீகன்

➡ அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி றொனால்ட் றீகன் (93 வயது) காலமானார்.



அமெரிக்காவில் றீகன் நினைவாக

➡ சவுதி அரேபியாவின் அருகே தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் பி.பி.ஸி செய்தியாளர்கள் படம் எடுத்துக் கொண்டிருந்த வேளை தீவிரவாதிகள் சுட்டதில் புகைப்படப்பிடிப்பாளர் கிரேல் காட்டர் உயிரிழந்தார். செய்தித் தொகுப்பாளர் காயமடைந்தார்.

➡ இரண்டாவது உலகப்போரின் போது ஹிட்லரின் படைகளைத் தோற்கடிக்க அடித்தளமிட்ட நோர்மண்டித்தரையிறக்கத்தின் 60 ஆவது ஆண்டு நினைவுதினம் பிரான்சில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.


60ஆவது நினைவு நிகழ்வு

## 07

➡ ஈராக்கில் ஷியாபிரிவுத் தீவிரவாதிகள் பழமைவாய்ந்த மசூதி மீது ரொக்கட் தாக்குதல் நடத்தியதில் இருவர்பலி.

➡ பாகிஸ்தான் தென்பகுதியில் உள்ள ஹைதராபாத்தில் நச்சுத்தன்மையடைந்த தண்ணீரை அருந்தியதில் 30 பொது மக்கள் உயிரிழந்தனர்.

➡ தென்கொரியாவின் 17 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.


## 08

➡ றியாத் நகரில் உள்ள எண்ணெய் நிறுவனத்தில் பணியாற்றிய அமெரிக்கர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➡ காஸாநகரில் உள்ள உலோகத் தொழிற்சாலை மீது இனந்தெரியாதோர் ஏவுகணைத்தாக்குதலை நடத்தினர்.

➡ மேற்காபிரிக்க நாடான கபோவின் தலைநகரான லிப்ரவிலில் இருந்து 29 பயணிகளுடன் புறப்பட்ட தனியார் விமானம் கப்போவளைக் குடாவின் கரையிலிருந்து 100 மீற்றர் தொலைவில் வீழ்ந்ததில் 16 பயணிகள் உயிரிழந்தனர்.

➡ வெள்ளிக்கிரகம் 122 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் சூரியனைக் கடந்து சென்ற அரிய நிகழ்வு இடம் பெற்றது. 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதிக்குப்பின் நடைபெற்ற இந்நிகழ்வை விசேட கருவிகள் மூலம் பெருமளவானோர் பார்வையிட்டனர்.


அரிய நிகழ்வு

➡ ஈராக் தொடர்பான முக்கிய தீர்மானம் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றம்.


ஐ.நா.வில் விவாதம்

➡ ஜி.8 நாடுகளின் மாநாடு அமெரிக்க ஜோர்ஜியா மாநிலத்தில் ஆரம்பம். 50 ஆயிரம் பேரைக் கொண்ட அமைதிப்படையை உருவாக் கத்திட்டம்.

## 09.

➡ பாகிஸ்தானுக்கான ஆப்கான் எல்லைப் பகுதியில் ஆயுததாரிகள் மீது பாகிஸ்தான் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

➡ ஆப்கானில் குண்டுஷ் பிரதேசத்தில் வீதித்திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் பலி; 6 பேர்படுகாயம்.




ஆண்டொன்றில் கனவாய் போன நினைவலைகள்

சர்வதேசக் கடற்பரப்பில் வணிகக்கப்பலினை கடற்படையினர் தாக்கி அழித்தபோது

நிஜமான உருவாக... 14.02.1980 — திதி 02.06.2004 — நிழலான கனவாக... 14.06.2003

கடற்புலி மேஜர் நிர்மலன்
ரணராஜா ரகுநாத்

விடியலைத் தேடிய வேங்கை இவன்
கடல் மீது களங்கண்ட மறவன் இவன்
படகோட்டும் திறன் கொண்ட சூரன் இவன்
சண்டைப் படகுதன் கட்டளை அதிகாரி இவன்

சாள்ஸ் அணிதனிற் பணி செய்து நின்றான்
சர்வதேசம் தன் பணிக்காய் அலை தவழ்ந்தான்
தாவிடும் புலிகளின் வணிகக் கப்பல் தனில்
கப்பல் கப்டனாய் கடமை செய் வேளை
கயவர் தாம் அழித்தனரோ?

ஆண்டொன்று கடந்தென்ன-பல
ஆண்டுகள் தான் கழிந்தென்ன..?
இன்று வரை வாழ்கின்றோம்
உங்கள் ஜீவன் எம்மோடு...!

தினம் தோறும் விடியலிற்காய்
நகருகின்ற பொழுதுதெல்லாம்
தினம் தினம் உங்களை நாம்
தொழுகின்றோம் கண்ணீரால்...!

மறைந்திடுமோ எம் காயம்...?
கரைந்திடுமோ எம் சோகம்...?

ஆறாகும் கண்ணீரில்.
கரைகிறது எம் காலம்...!

எப்போதும் எங்கள் மூச்சில்
உணர்கின்றோம் உங்கள் சுவாசம்.!
இனியும் வரும் கால மெல்லாம்
கரைவோம் உங்கள் நினைவுகளில்.....!

14.06.2003 அன்று எம் செல்வத்துடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய 11 மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நி.மு:-நெடியகாடு,வல்வெட்டித்துறை,யாழ்.
த.முக:-இல-40,ஹெட்டாவா சந்தி, விசுவமடு

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
அன்பு அம்மா, ஆசை அக்கா, அத்தான்,மருமகள்,
பாசமுள்ள தங்கை,போராளி நண்பர்கள்

(9719)



லெப்.கேணல்
கஜேந்திரன்(குட்டித்தம்பி)
கிருஸ்ணன் கமில்தினேஸ்

தாயின் மடியில் 01.12.1974 — மண்ணின் மடியில் 14.06.2003

வருவாய் நீ என-வழி நாம்பார்த்திருக்க
இடியாய் ஒரு செய்தி வந்தது-எம் செவிக்கு
இது கனவாக இருக்கக் கூடாதா
என நாம் கதைத்தோம்.
இருந்தும் என்ன நினைவாகித்தானே போனாய் நீ!
உந்தன் இலட்சியக் கனவோடு நாம் நடக்கின்றோம்...
எம் தாகங்கள் தீரும் நாளதற்காய்

இதேநாளில் சர்வதேசக் கடற்பரப்பில் வீரகாவியமான
அனைவரையும்நினைவு கூருகின்றோம்

நண்பர்கள்,சகபோராளிகள்

(4600)



## இன்று நடைபெறும் புதூர் நாகதம்பிரான்
## ஆலயபொங்கல் உற்சவம் சிறப்பாக நடை பெற வாழ்த்துகின்றோம்

தரமான கோழிக்குஞ்சுகள்,
கோழித்தீவனங்கள்,
கால்நடைகளுக்கான
மருந்து வகைகள்,
தடுப்பு மருந்துவகைகள்
அனைத்தும் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ள

## மிதுஷா ரேடர்ஸ்

இல. 216 புகையிரத நிலைய வீதி, குருமன்காடு
வவுனியா.
தொ. பே. 077 6152022

(சி-9838)

தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி,
கையடக்க தொலைபேசி, அழகுசாதனப் பொருட்கள்,
சுவர்மணிக்கூடுகள், மின்சாரப்பொருட்கள்
போன்றவற்றை பெற்றுகொள்ள

## துர்க்கா சென்ரர்

இல. 374. பஜார் வீதி,
வவுனியா.
தொ. பே. 024 — 2222288

(சி-9839)

## H. இமாந்தின் மொதின் ஹோட்டல்

இல. 92. மன்னார் வீதி, குருமன்காடு
வவுனியா.

(சி-9840)

HERO HONDA World No.1 Two-Wheeler Company

HERO HONDA CD100SS CD100

## என்.எஸ்.இரத்தினம் & சகோதரர்கள்

இல.06 1ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.



2 Year warranty

(சி-9841)



## கர்வாலோ ஒப்ரிக்கல்ஸ்

இல:13, புதிய பஸ்நிலையம், வவுனியா.
தொ. பேசி. 024:2222649

(சி-9842)



சகல விதமான சேட்டிங் சூட்டிங் ரெடிமெற்
ஆடை வகைகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## t சாந்தா ரெக்ஸ்

இல:108~A பஜார் வீதி, வவுனியா.
தொ.பேசி:~024~22879

(சி-9843)

இன்று நடைபெறும் புதூர் நாகதம்பிரான்
ஆலயபொங்கல் உற்சவம் சிறப்பாக நடை பெற வாழ்த்துகின்றோம்

பாடசாலை சின்னம் பித்தளை, நிக்கல், பிலாஸ்ரிக் முறையில் செய்துகொடுக்கப்படும். அத்தோடு நெசவுசெய்து துணிவகையில் தேவையான டிசைன், கலர்கல், இம்றைடிங், வேலைப்பாடுடன் செய்துகொடுக்கப்படும்

நூபா றப்பர் ஸ்டேம்

106V. பஸ்நிலையம் மேல்மாடி, வவுனியா.
தொ.பே. 024 4589688
(சி-9832)

புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அத்துடன் சகலவிதமான பத்திரிகைகளுக்குமான விளம்பரங்கள் பெற்றுகொள்ளப்படும்.

உமையாஸ்

12, பஸ்நிலையம் வவுனியா.
(சி-9833)

சகலவிதமான பலசரக்கு பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையகவும் பெற்றுக்கொள்ள

சியாமளா ரேட் சென்ரர்

மன்னார் றோட்,
குருமன்காடு வவுனியா.
தொ.பே. 0242223889
(சி-9834)

22 கரட் தங்க நகைகளை சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள

சக்தி நகையகம்

256,B, கண்டி வீதி, வவுனியா.

சகலவிதமான என்பீல்ட் பெயின்ற் வகைகளை ஒரேஇடத்தில் பெற்றுக்கெள்ள

சக்தி பெயின்ட் டீலர்

216A2 குருமன்காடு, வவுனியா.
தொ.பே,தொ.ந —024588190
(சி-9835)

22 கரட் தங்க நகைகளை சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள

கனேசா நகையகம்

123, பஜார் வீதி, வவுனியா. தொ.பே, —024 2222464



யாழ்கனேசா நகையகம்
124, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே, —0112336252

கனேசா நகையகம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே, —021-2225987
(சி-9836)

## "-யூரோ-2004" கால்பந்துப் போட்டி-

# முதல் நாள் பரபரப்பு ஆட்டத்தில்

# கிறீஸ், ஸ்பெயின் அணிகளுக்கு வெற்றி

16 நாடுகள் பங்கேற்கும் 'யூரோ- 2004' கால்பந்துப் போட்டி நேற்று போத்துக்கல்லில் ஆரம்பமானது.

இதில் முதலாவது போட்டியில் போட்டியை நடாத்தும் போத்துக்கல் அணிக்கும் கிறீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் கிறீஸ் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது. இதனை அடுத்து கிறீஸ் தலைநகர் எதென்சில் கால்பந்து ரசிகர்கள் தமது அணியின் வெற்றியை கொண்டாடி மகிழ்ந்தனர்.

உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிக்கு அடுத்தபடியாக மிகவும் பிரபலமாக விளங்கும் ஐரோப்பிய கோப்பை கால்பந்துப் போட்டி போத்துக்கல் தலைநகர் லிஸ்பெனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது இதில் கிறீஸ் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் போர்த்துக்கல்லை சொந்த மண்ணிலேயே வீழ்த்தியது.

இதனால் உற்சாகமடைந்த கிரேக்க நாட்டு கால்பந்து ரசிகர்கள் இந்த வெற்றியை தலைநகர் எதென்சில் கோலாகலமாக கொண்டாடினர்.

இதேபோன்று மற்றுமொரு போட்டியில் ஸ்பெயின் அணி ரஷ்ய அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வீழ்த்தியது. இதனை அடுத்து போர்த்துக் கல்லில் ஏராளமான ஸ்பெயின் ரசிகர்கள் தங்கள் அணியின் வெற்றியை கொண்டாடி மகிழ்ந்தனர்.

மேற்படி போட்டிகள் போத்துக்கல்லின் எட்டு நகரங்களில் நடைபெறுகின்றது.போட்டியின் ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை பேர்த்துக்கல் அணி கிறீசைவிடச் சிறப்பாக விளையாடியபோதும் கோல் போடும் பல வாய்ப்புக்கள் கைநழுவிப்போனது.

இறுதியல் போட்டி நிறைவடைய இரண்டு நிமிடங்கள் மீதமுள்ள நிலையிலேயே ஒரு கோலை போர்த்துக்கல்லால் போடமுடிந்தது.

கிறீஸ்அணி ஆட்டத்தின் முதற்பாதியிலேயே இரு கோல்களைப் போட்டு முண்னணி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

### யூரோ கிண்ணகால்பந்துப் போட்டிகளில் பெருந்தொகைப் பணம் கைமாறலாம்

யூரோ கிண்ண கால்பந்து போட்டிகள் நடைபெற இருக்கும் மூன்று வாரங்களில் 300மில்லியன் பவுண்டுகள் பயன்படுத்தப்படலாம் அல்லது பந்தயக்காரர்களின் கைகளில் புழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் பிரான்ஸ், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியின் போது 25மில்லியன் பவுண்டுகள் கைமாறவுள்ளது. 20மில்லியன் பவுண்டுகள் 2002ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் பிரேசில் அணிகள் மோதிய வேளை கைமாறியிருந்தது.இப்போது நடைபெற்று வரும் இப் போட்டியில் 25மில்லியன் பவுண்ட் கைமாறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்துப் போட்டியில் இங்கிலாந்தைவிட பிரான்ஸ் அணியே வெற்றி பெறும் என்ற கருத்து நிலவினாலும் 13-5 என்ற அடிப்படையில் பிரான்ஸ் அணி வெற்றி பெறும் என்றும் 15-8என்ற அடிப்படையில் இரண்டு அணிகளும் வெற்றி பெறாது போட்டி சமப் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விம்பிள்டன் பயிற்சிப்போட்டியில் மாட்டீனா வெற்றிபெற்றார்



முன்னாள் விம்பிள்டன் டென்னிஸ் சம்பியனான மாட்டீனா மீண்டும் களமிறங்கியுள்ளார்.47வயதுடைய மாட்டீனா தன்னைவிட வயதுகுறைந்த வீராங்கனை ஒருவரைத் தகுதிகாண் போட்டியொன்றில் தோற்கடித்துள்ளார்.

லிஸ்பேனில் நடைபெற்ற மேற்படி போட்டியில் 22வயதுடைய மாறாவை 6-4,6-3 என்ற செக்கனில் முதலாவது தகுதிகாண் போட்டியில் மாட்டீனா வெற்றி பெற்றுள்ளார். மாட்டீனா 9முறை விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். தாம் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் இம்முறை விம்பிள்டன் போட்டிகளில் பங்கு பற்றுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஒலிம்பிக்தீபம் தென்னாபிரிக்கா சென்றது

## நெல்சன் மண்டேலா தீபத்தைக் கையேற்றார்

உலக சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக ஒலிம்பிக்தீபம் நேற்று




இந்தியாவில் இருந்து தென்னாபிரிக்கா சென்றடைந்தது.

அந்தத் தீபத்தை முன்னாள் தென்னாபிரிக்க சனாதிபதி நெல்சன் மண்டேலா இனப்பாகுபாடு ஆட்சிக் காலத்திலே தான் அனுபவித்த 27வருடகால சிறைவாசத்தின் போது தொடர்ச்சியாக 18ஆண்டு சிறைவாசம் இருந்த றொபின்தீவு சிறைக்கூடத்திற்கு முன்னால் இந்தஒலிம்பிக் சுடரை ஏந்தி உயரப்பிடித்திருந்தார்.

சுதந்திரத்தின் சின்னமாகக் கருதப்படுகின்ற இந்த ஒலிம்பிக் சுடரை தென்னாபிரிக்க தடகள வீரர் றொபின் தீவைச்சுற்றி ஓடிவந்தார்.

இதன்போது நூறுக்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்களும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். ஒலிம்பிக் தீபம் ஆபிரிக்கக்கண்டத்துக்கு கொண்டுவரப்பட்டமை இதுவே முதல் தடவை. ஒலிம்பிக் தீபம் தென்னாபிரிக்காவில் இருந்து எகிப்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

## மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து வெற்றியை நோக்கி

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான நேற்று ஆட்டநேர முடிவின் போது 284 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி 2விக்கெட்டுக்களை இழந்து 23 ஓட்டங்கள்ளைப் பெற்றுள்ளது.

நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும்இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 319 ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து அணி அதன் முதலாவது இனிங்சில் 384 ஓட்டங்களைப் பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட மேற்படி டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-0 என்ற நிலையில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலைமீதான சைக்கிள் ஓட்டப்போட்டி; முன்னாள் சம்பியன் வெற்றிபெற்றார்

மலைகள் மீதான சைக்கிள் ஓட்ட முன்னாள் சம்பியன் மைக்கல் ரசமுல்டக்சீன், சைக்கிள் ஓட்டப்போட்டியின் ஆறாவது கட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார். இந்த போட்டி பிரான்சில் நடைபெற்றது. இதில் இரண்டாவது அமெரிக்க வீரர் தைலகமில்டனை டக்சீன் வென்றுள்ளார்.

## சிறிலங்காவுக்கு எதிரானடெஸ்ட் போட்டியில் வோர்ன் கலந்து கொள்வது பிரகாசமாகியுள்ளது



யூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் பங்கேற்பது 50 வீதம் சாத்தியமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரைக் கவனித்து வரும் மருத்துவர் ஷேன்வோர்னுக்கு சத்திரசிகிச்சை தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் ஷேன்வோர்ன் சிறிலங்காவுடனான போட்டியில் கலந்து கொள்வது பிரகாசமாகியுள்ளது.


இதேவேளை ஷேன்வோர்ன் தொடர்பான மருத்துவ அறிக்கை உடனுக்குடன் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



படம்- செல்வராசா

1986 ஆம்ஆண்டு ஜன் மாதம் 10 ஆம் திகதி மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவாக கடந்த 10 ஆம் திகதி குருநகரில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியினரும் இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழக அணியினரும் தத்தமது வெற்றிக் கேடயங்களுடன் இருப்பதைப் படத்தில் காணலாம்.

## சிந்தனைக்கு



அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை. தன்னலமும், தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகின்றது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக ஆக்கிவிடுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-06-2004
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham 23ela@yahoo.com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## தற்பாதுகாப்பு!

பரந்தனில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தில் மூன்று அப்பாவிகள் உயிரிழந்தமை மிகவும் வேதனைக்குரியது. சமாதானக்காலப் பகுதியில் இத்தகைய துயரச்சம்பவம் இடம் பெற்றமை மனம்வருந்தத்தக்க தொன்றாகும்.

இதற்கு முன்னரும் இத்தகைய சம்பவங்கள் பல இடம்பெற்றதுண்டு. இந்நிலையிலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாமல் தவிர்க்க முடியாமல் போனமையானது துரதிஷ்ட வசமானது. ஆனால் இவை தவிர்க்கப்படமுடியாதவையா? எனின் இதற்கு 'ஆம' என எவருமே பதில் கூறிவிட முடியாது?

ஏனெனில் நிலக்கண்ணிவெடிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினால் பெரியளவில் மேற்கொள்ளப் பட்டன மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இதற்கெனப் பெருமளவு நிதியும் செலவு செய்யப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக கண்ணிவெடிகளினால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து பலமுறை பலவழிகளில் மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளன. இதனைத்தவிர இந் நிலக்கண்ணிவெடிகளினால் பல விபரீதங்கள் விளைந்துள்ளமை நேரில் காணப்பட்டவையாகவும், அறியப்பட்டவையாகவும் உள்ளன. இந்நிலையில் கண்ணிவெடிகளைக் கவனத்திற் கொள்ளாது விடல்அன்றி, அதனை விளையாட்டாகக்கொள்ளுதல் அது விபரீதங்களையே விளைவிக்கத் தக்கதாகும்.

இதேவேளை வடக்கில், குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்கள், புதைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இடங்கள், கண்ணிவெடிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் என்பன தெளிவாகவே அடையாளம் இடப்பட்டுள்ளன. அவை குறித்த தகவல்கள், குறியீடுகள் என்பனவும் தெளிவாக அடையாளம் இடவும் பட்டுள்ளன.

இந் நிலையில் கண்ணிவெடிகளில் சிக்கிக் கொள்ளுதல் என்பதற்கு கவலையீனமும், வெடிபொருட்களின் விபரீதம் பற்றிய அச்ச உணர்வு அற்ற நிலையுமே காரணமாகும்.

இதனை வேறுவிதமாகக் கூறுவதானால் அசட்டுத்துணிவும் வரட்டு நம்பிக்கையுமே இத்தகைய நிலைய்ய தோற்றுவிப்பதற்குக் காரணமாகும்.

கடந்த வெள்ளியன்று பரந்தனில் வாகனம் நிலக்கண்ணிவெடியில் சிக்கியமைக்கும் மேற்கூறப்பட்டவையே காரணமாகும். ஏனெனில் கண்ணிவெடியில் வாகனம் சிக்கியபகுதி நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதி என்பது மட்டுமல்ல, அகற்றப்படவில்லை என எச்சரிக்கை செய்யப்பட்டிருந்த பகுதியும் ஆகும். இத்தகைய துயரச்சம்பவத்திற்கு இதில் சிக்கிக் கொண்டவர்களே காரணமாகியுள்ளனர்.

ஆனால் நிகழ்ந்த துயரச்சம்பவத்திற்கு அவர்களே காரணம் என்பதினால் அது குறித்துக் கவலை கொள்ளாது இருந்துவிட முடியாது. அத்தோடு இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ளுதலும் அவசியமானதாகும். ஆனால் இதில்உள்ள முக்கிய விடயம் என்னவெனில் இத்தகைய துயரச்சம்பவங்கள் நிகழாமல் மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள முடியுமே ஒழிய ஏனையவர்களால் பாதுகாப்பு அளித்தல் கடினமானதாகும். ஏனெனில் கண்ணிவெடிகள் பல்லாயிரக்கணக்கில் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விதைக்கப்பட்டுள்ளன. இதில் மீட்கப்பட்ட பகுதிகள் எவை? மீட்கப்படாத அபாயம் நிறைந்த பகுதிகள் எவை? என எப்பொழுதும் நேரடியாக அறிவுறுத்தல்களை விடுதல் என்பது சாத்தியப்பாடானதொரு விடயமாக இருக்கமாட்டாது.

ஆகையினால் கண்ணிவெடிகளினால் நிகழக்கூடிய அபாயங்களை உணர்ந்தவர்களாகவும், கண்ணிவெடிகள் குறித்த எச்சரிக்கைகளை அனுசரித்து நடவடிக்கைகளை மேற் கொள்பவர்களாகவும் மக்களே இருத்தல் வேண்டும். அதாவது கண்ணிவெடிகள் பற்றிய விழிப்புணர்வு கொண்டவர்களாகவும், அறிவுறுத்தல்களை ஏற்றுச் செயற்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

அவ்வாறு இருப்பார்களேயானால் இத்தகைய விபரீதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இதனால் அநியாயமாக இழப்புக்கள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ளமுடியும். இதனைத் தவிர்த்து கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்படாத வரையில் அதிலிருந்து பாதுகாப்பிற்கு வழிவகைகள் தேடுதல் கடினமானதாகவே இருக்கும்

# காலாவதியான தகரத்திலடைத்த உணவுகளை திகதிகளை மாற்றியமைத்து விற்பனை

### கொழும்பில் பாரிய மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காலாவதியான தகரங்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களை காலாவதி திகதியை மாற்றியமைத்து விற்பனை செய்யும்பாரிய அளிவிலான வியா பாரத்தைசிறிலங்காப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது பொலிசார் மேற் கொண்டசோதனையின் போது பல ரகத்தைச்சேர்ந்த உணவுப் பொருட்கள் அடைக்கப்பட்ட தகரங்கள் மற்றும் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப் பட்டுள்ளன.

கொழும்பு மட்டக்குளிப் பிரதேசத்தில் களஞ்சியசாலை ஒன்றிலிருந்தே இந்தக் காலா வதியான உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது ரின்களில் காலாவதி திகதியை இரசாயனப் பெருட்களை பயன் படுத்தி அகற்றியபின்னர் இயந்திரம் மூலம் புதிய திகதியை பதிவுசெய்வதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற பாரிய அளவில் காலாவதியான உணவுப் பொருட் களை இதுவரைகாணவில்லை எனவும் இது தொடர்பாக நீதி மன்ற விசாரணை மேற் கொள்ளப்படுமென கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

# சர்வதேச துறைமுக பாதுகாப்பு விதிகள் இலங்கையில் இன்று முதல் கடுமையாக அமுல்

சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்பு நடைமுறை விதிகளை இலங்கை துறைமுகங்களில் கடுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் இன்று தொடக்கம் எந்தவொரு கப்பலும் முறையான உத்தரவுப்பத்திரமின்றி இலங்கைத்துறை முகங்களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப் படுகின்றது.

சர்வதேச கடல் போக்குவரத்து நிறுவனம் இந்தப் பாதுகாப்பு நடைமுறை விதிகளை விடுத் துள்ளது. துறைமுக அமைச்சர் மங்கள சமரவீரவின் பணிப் புரையின் பெயரிலே இந்தப் பாதுகாப்பு நடைமுறைகளை அமுல்படுத்தும் தகுதி வாய்ந்த அதிகார சபையாக இலங்கை கடற்படை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கப்பல் மற்றும் துற்றைமுக பாதுகாப்பு நடைமுறை விதிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி உலக ரீதியாக அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

# எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை; 10 ஆளும் கட்சிப் பா.உ.கள் பதவி இழக்கலாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் அரசாங்கத்துக்கு எதிராக 118 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சமர்ப்பிக்கவுள்ள நம்பிக்கையி ல்லாப் பிரேரணையையடுத்து, அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் 10 பேர் தமது பதவிகளை இழக்க நேரிடலாமென தெரிவிக் கப்பட்டுள்ளது.ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியமை நாடாளுமன்றின் செங்கோலைத் திருடியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை உள் ளடக்கிய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபாநாயகர் லொக்கு பண்டாரவிடம் கைய ளிக்கப்படவுள்ளது.இந்நிலையில் அரசதரப்பு 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் குற்றவாளிகளாக இனங் காணப்படும் பட்சத்தில் அவர்களின் நாடளுமன்றப் பதவிகள் பறிபோகலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வட, கிழக்கு புனரமைப்புகளுக்கு உதவும் சர்வதேச நிறுவனங்களின் மாநாடு

வடக்கு கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் சர்வதேச நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு இன்று கொழும்பில் நடை பெறுகின்றது.

இம்மாநாடு நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்க தலைமையில் இடம்பெறுகின்றது. இம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த அமைப்புக்கள் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு வடக்கு கிழக்கு மாகாணத்தின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு விக்னராஜாவின் பெயர் சிபாரிசு

(கொழும்பு)

இலங்கையில் இலஞ்ச ஊழல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட ஆணைக் குழுவில் தற்போது இருவர் மட்டுமே அங்கம் வகிக்கின்றனா .மூன்றாவது ஆணையாளர் இல்லாமையால் இந்த ஆணைக்குழு தனது செயற் பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது.நீண்டகாலமாக இந்த வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது. இதேவேளை மூன்றாவது ஆணையாளரை நியமனம் செய்வதில் தோன்றியுள்ள தமாதங்களை ஆராய்வதற்கு சனாதிபதி நான்கு அமைச்சர்கள் கொண்ட குழுவை நியமித்துள்ளார் தற்போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மூன்றாவது ஆணையாளராக முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கே.விக்னராஜாவின் பெயர் சிபாரிசு செய்யப் பட்டுள்ளதாக தெரி விக்கப் படுகின்றது. (32)

### கூட்டம்


தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று விவசாய சம்மேளனம் கிராம முன்னேற்றச்சங்கம் இவற்றுக்கான விசேட கூட்டம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சாவகச் சேரி பிரதேசசபையின் கலாச்சார பொது மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணியளவில் நடை பெறவுள்ளதால் இந்த அமைப்பின் தலைவர்கள், செயலாளர், பொரு ளாளர் மற்றும் சங்க உறுப் பினர்கள் கலந்துகொள்ளும்படி வெளியிடப்பட்டுள்ளது. (28)

# டிரோன் பர்னாண்டோவுக்கு சு.க.அரசில் உயர்பதவி

### சந்திரிகா உறுதியளித்துள்ளாராம்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டு வெளி யேறிய முன்னாள் நீதி அமைச்சர் டிறோன் பர்னாண்டோ தனக்கு சிறி லங்கா சுதந்திரக்கட்சி அரசாங் கத்தில் உயர்பதவி ஒன்று கிடைக்கவு ள்ளதாக தெரிவித்துள்ளார்.

எத்தகைய பதவிஎனக் குறிப்பிடாத அவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு உயர்பதவியொன்றை வழங்க உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.




### கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடல்நீர் வெப்பமடைவதால், அதிஊதாக் கதிர்களின் தாக்கத்தினால் முருகைக்கற்பாறைகளில் இருந்து அல்காக்கள் வெளியேறிப் பாறை நிறமிழக்கும் தோற்றப்பாடு' முருகைவெளிறல்' எனப்படுகிறது. அல்காக்களின் உணவூட்டல் இன்றி வெளிறிய பாறைகள் இறுதியில் இறக்கின்றன.1978 இல் 75 வீதமான பாறைகள் வெளிறுதலால் பாதிப் படைந்துள்ளது. 16 வீதம் உயிர்ப்பை இழந்துள்ளன.

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து மாறுபட்ட கருத்துக்களை ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

ஜே.வி.பி. தமது அரசியல் நலன்கருதி இரட்டைக் கொள் கையை கடைப்பிடிப்பதாக ஜாதிக ஹெலஉறுமய தெரிவித் துள்ளது.ஹெலஉறுமயவின் நடாளு மன்ற உறுப்பினர்கள் எல்லாவெல மேதானந்ததேரர், விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் இந்த கருத்தைவெளியிட்டுள்ளார். முன் னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாறுபட்ட கொள்கைகளை பின் பற்றி வருவதாகக் குற்றம் சுமத்தி யுள்ளார். அதேநேரம் தேசப்பற் றாளர் தேசியஇயக்கமும் முன்னர் கடைப்பிடித்து வந்த கொள்கை யைத் தற்சமயம் முழுமையாக மாற்றியுள்ளது. ஜாதிகஹெல உறுமயவைப் பெறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சிக்கு எதி ரான கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது. ஜே.வி. பி.யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் "ரட்ட பெரட்ட"என்ற நாட்டை எழுச்சிக் கொள்ளச் செய் வோம் என்ற கோஷத்தை முன் னர் தெரிவித்து வந்த போதும் தற்சமயம் அதன் இடைக்கால தன்னாட்சியை எழுச்சிகொள்ளச் செய்வோம் என்ற கொள்கையை முன்னெடுத்துச் செல்வதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடா ளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் குறிப்பிட் டுள்ளார். (32)

# வாழைச்சேனை காகித ஆலையில் ஜே.வி.பி.யினரின் தொழிற்சங்கம்

## ஊழியர் மத்தியில் பலத்த எதிர்ப்பு

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் ஜே.வி.பி. யினர் தொழிற்சங்கம் ஒன்றை அமைத்ததை அடுத்து ஊழியர் கள் மத்தியில் பலத்த எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் காகித ஆலைக்குச் சென்ற ஜே.வி.பியினர் ஊழியர்க ளில் ஒரு சாராரை தம் வசப் படுத்தி தொழிற்சங்கம் ஒன்றை புதிதாக அங்கு உருவாக்கி உள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் நடை பெற்றுவரும் இந்தச் சமாதான காலத்தில் பேரினவாதிகளால் ஒரு குழப்பத்தை விளைவிக்கும்வகையி லேயே இந்தத் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அமையுமென அங்குள்ள தொழிலாளர்களில் பெரும்பாலானோர் அச்சமடைந் துள்ளதாக அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வன்னி...

வெதுப்பியினை விற்பனை செய்யும்படி வெதுப்பக உரிமை யாளர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை விலைக் கட்டுப்பாட்டுப்பகுதி கேட்டுள்ளது. வெதுப்பியின் நிறையும், தரமும் பேணப்படவேண்டும் எனவும் கேட் கப்பட்டுள்ளது.

## சனாதிபதியின்...

ஆனால் நேற்றுமுன்தினம் சனா திபதி செயலகத்தினால் விடுவிக் கப்பட்ட அறிக்கையில் அதனைப் பிரதிபலிக்கக் கூடிய சரியான வாசகங்கள் இருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதி...

ஒருவரின் தலைமையில் நடை பெறும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தேசப்பற்றாளர்...

யிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலை யில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கிய உறுப்பி னர்கள் விமல் வீரவன்ச மற்றும் அர்ஜுனரணதுங்க ஆகியோரே இந்தப் போராட்டத்திற்கான ஏற் பாடுகளை மேற்கொண்டு வரு கின்றனர் தமது கட்சி மற்றும் நாடாளுமன்ற நிலைகளில் இருந்து இந்த எதிர்ப்பை வெளிப் படுத்த முடியாத நிலையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற பெயரில் இவர்கள் இச் செயற்பாடுகளை முன்னெடுக் கவுள்ளனர். (32)

## சிறுபான்மை...

சனாதிபதி ஆவண செய்யவேண் டும் விடுதலைப்புலிகள் முன்வைத் துள்ள இடைக்கால தன்னாட்சி முறையை சனாதிபதி ஏற்றுக் கொண்டால் மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அவருக்கு கிடைக்கும். இதே போல இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள கோரிக்கைகளை சனாதிபதியும் அரசும் ஏற்றுக் கொண்டால் மாத் திரமே அவர்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவு கிடைக்கும். எனவே இந்த விடயம் தொடர்பாக தெளிவான விளக்கம் ஒன்றை அரசாங்கத்தின் பங்காளி யான மக்கள் விடுதலை முன்ன ணியினருக்கு சனாதிபதி வழங் குதல் அவசியமெனவும், மாத்த ளையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற் றும்போது செல்லச்சாமி தெரிவித் துள்ளார்.

## கைதாகி...

ஏகோபித்து எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கேட்போர் கூடத் தில், சங்கத்தின் தலைவர் ப. செல்வராசா தலைமையில் காலை 11.00 மணிக்கு இக்கூட்டம் இடம் பெற்றது. யாழ். மாவட்ட அன் னையர் முன்னணி பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டி ருந்தனர்.

"தற்போதுள்ள அரசின் காலப் பகுதியிலேயே யாழ்.மாவட்டத்தில் பெருமளவு கைது செய்துகாணா மல் போதல் சம்பவங்கள் இடம் பெற்றன" சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்களை நேரில் சந்தித்து உரையாடிய போது தாம் இவ் விடயத்தில் உரிய நடவடிக் கையினை எடுப்பதாக உறுதிய ளித்திருந்தார். ஆனாலும் வருடங் கள் பல கடந்த போதிலும் இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசுகள் மாறிமாறி ஆட்சி பீடம் ஏறுகின்ற போதும் இது வரை எந்தவொரு நடவடிக் கையும் முன்னெடுக்கப்பட வில்லை. விசாரணைக் குழுக்கள் எனப்பல குழுக்கள் நியமிக்கப் பட்டு விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டபோதும் அவ்விசார ணைகளின் முடிவு பற்றி எதுவும் அறிவிக்கப்படுவதில்லை. அவை உலகை ஏமாற்றுவதற்கான போலி நாடகங்கலெனவே நாம் கருதுகின்றோம்.

இந்நிலையில் கைது செய்யப் பட்டு காணாமல் போனோர் விடயத்தில் தமிழ்தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் தலையிடவேண்டுமென கோருகின்றோம். பாராளு மன்றத்தில் இவ்விடயம் தொடர் பாக பேசப்படவேண்டும். அத்து டன் பாராளுமன்றத்தில் அவர்க ளால் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவேண்டும். காணாமல் போனவர்களது நிலை தொடர்பான உண்மைநிலை உல கிற்கு வெளிக்கொணரப்பட வேண்டும் எனக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது. (27)

## சந்தர்ப்பத்திற்கு...

பொலிஸ் தரப்பு கூறுகிறது.

இந்தத் தகவல் வெளியான பின்னர் ஜே.வி.பி தனது குற்றச்சாட்டை மீண்டும் ஐ.தே.க. வின் மீது சுமத்துகிறது அதே நேரம் தாம்விடுகின்ற பிழைகளை மறைப்பதற்காக சிறி லங்கா சுகந்திரக் கட்சியில் இருக்கும் தவறுகளை திருத்து வதாகக் கூறிக்கொண்டு அறிக்கைகளை வெளியிட்டு வருவதாகவும் ஐ.தே.க. குற்றம் சுமத்துகிறது. (32)

# வவுனியாவில் சிறப்புற நடைபெற்ற "விடுதலை நூல்" வெளியீட்டுவிழா

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அவர்களின் "விடுதலை" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வவுனியாவில் சிறப்புற நடைபெற்றது.

வவுனியா சுத்தாநந்த இந்து இளைஞர் மண்டபத்தில் இடம் பெற்ற நூல் வெளியீட்டு விழா விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமையில் ஆரம் பமாகியது பொது சுகச்சுடரினை இரண்டு மாவீரர்களினதும் இரண்டு போராளிகளினதும் தந்தை மணியம் ஏற்றினார். தேசியக் கொடியினை



வவுனியா நகரப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஏற்றினார். தொடர்ந்து வரவேற்புரையினை வவுனியா மாவட்டஅரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலைவழங்கினார். தொடர்ந்து அறிமுகவுரையை புதுவைஇரத்தினதுரை வழங்கினார்.

நூலினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராத லிங்கம் வெளியிட முதல்ப் பிரதியை குடியிருப்பு பிள்ளையார் கோவில் குருக்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப்பிரதியை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் வழங்க முதல் சிறப்புப் பிரதியை அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர் செந்தில்நாதன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து புத்தகத்தின் மதிப்பீட்டு உரையினை வவுனிய வளாகத்தின் விரிவுரையாளர் நந்தகோபால் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஜெயச் சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள் நன்றி உரையினை எஸ்.என். ஜீ. நாதன் வழங்கினார். (21)


# அருள்மிகு தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150 ஆம் ஆண்டு விழா

**16.06.2004 ரத ஊர்வலம்**

*16.06.2004 தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ரதம்-கிளிநொச்சி செல்ல அன்னை திருவருள் புரிந்துள்ளாள்.*
*வழிநெடுகில் உள்ள பாடசாலைகளில் நிகழ்வுகள்.*

**தூய அன்னை ரதத்தில் ஆரோகணித்து,**
**தமிழ் மக்களின் துயர் துடைக்க வருகிறார்!**
**உலகெல்லாம் அன்புமேவி ஒரு குடும்பமாக வாழ்க!**

செயலாளர்,
ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (4595)


# சாவு அறிவித்தல்

அமரர்

**திருமதி ஸ்ரீ மோகனசுந்தரி ராஜராஜேஸ்வரன்**

போராளி ஈழச்செல்வன் (லோலோ) அவர்களின் தாயார் திருமதி மோகனசுந்தரி ஸ்ரீ ராஜராஜேஸ்வரன் அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் இறுதி நிகழ்வு 2004.06.13 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
போராளி மலைமகள்.

(சி.09718)

# சாவு அறிவித்தல்



# சித்தர் காசிநாதர்-பொன்னம்பலம்

கோணங்குளம் கண்டாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சித்தர் காசிநாதர், சின்னப்பிள்ளை ஆகியோரின் புதல்வன், பொன்னம்பலம்12.06.2004 அன்று காலமானார். இவர் கரைச்சிப்பிரதேச விவாகப்பதிவாளரும், கண்டாவளைப் பிரிவு பிறப்பு இறப்புப் பதிவாளரும்,இலங்கை செஞ்சிலுவைச்சங்க கண்டாவளைப்பிரிவு கிளைத்தலைவரும்,கோணங்குளம் கற்பகவிநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவரும், முன்னாள் கண்டாவளைத் திட்ட உபகுழு உற்பத்திக்குழுத் தலைவரும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய அன்னதான சபைத் தலைவருமாவார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும்,முருகர் பொன்னாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும், சிறிதரன்(சாந்தன்) காசிதரன் (கனடா), ரஜனி (இந்தியா),மாவீரர் விஜிதரன் (குறழ முதன்),கார்த்தியாஜினி (யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவி) ஆகியோரின் அன்புத்தந்தையும், வேதாரணியம், இளைப்பாறிய விவாக பிறப்பு இறப்புப் பதிவாளர், வேலுப்பிள்ளை, கார்த்திகேசு, காலஞ்சென்ற தில்லையம்பலம், காலஞ்சென்ற குமாரசாமி, சிவசிதம்பரம் (அவுஸ்திரேலியா), யோகேஸ்வரி, சிவகாமிப்பிள்ளை, ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜினி, ஸ்ரீகா(கனடா), யோகநாதன்(அகஸ்ரீன் இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிதம்பரநாதர்,செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 14.06.2004 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது கண்டாவளை இல்லத்தில் நடைபெற்று பன்றி சுட்டான் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

கோணங்குளம்,
பன்றிசுட்டான்,
கண்டாவளை. (9720)

தகவல்:-
**மகன் சிறிதரன்.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.